Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 118

செவ்வாய்க்கிழமை
24 மார்ச் 2026

பங்குனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## பாணின் விலை 10 ரூபா அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 24
எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து, நேற்று நள்ளிரவில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வெதுப்பகப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. »11

## பேருந்துக் கட்டணம் சடுதியாக எகிறியது!

கொழும்பு, மார்ச் 24
நாடளாவிய ரீதியில் பேருந்து மற்றும் ஓட்டோக்களின் பயணக்கட்டணம் நேற்று நள்ளிரவில் »11

## பொதுமக்களின் மின்நுகர்வில் பிடியை இறுக்குகின்றது அரசு!

இலத்திரனியல் பெயர்ப் பலகைக்குத் தடை

மின் விளக்குகளுக்குக் கட்டுப்பாடுகள்

இரவுநேர மின்நுகர்வில் கண்காணிப்பு

கொழும்பு, மார்ச் 24
மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்கில், பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளைப் பிறப்பிப்பதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
நாட்டில் தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடியைச் »11

## இரண்டு ஏக்கர் காணிகள் வயாவிளானில் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணம் - வயாவிளான் பகுதியில் இராணுவத்தின் பிடியிலிருந்த இரண்டு ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.
வயாவிளானில் ஜே/244 கிராம அலுவலர் பிரிவில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காணிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன. காணி விடுவிப்புத் தொடர்பான ஆவணம் இராணுவத்தால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
(அ-ம-26-66-20)



# இலங்கைக்கு உதவ ஈரான் எப்போதும் தயார்!

ஈரானியத் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 24
எமது நட்பு நாடான இலங்கைக்கு எந்த நேரத்திலும் உதவி செய்வதற்கு ஈரான் தயாராகவே உள்ளது என்று, இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் அலி ரெஸா டெல்கோஷ் தெரிவித்துள்ளார். »11

## துருக்கியில் கோர விபத்து; ஈழத் தமிழர்கள் மூவர் பலி

அங்கரா, மார்ச் 24
துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.
புலம்பெயர்ந்து சுவிட்சர்லாந்தின் ஆர்கவ் மாநிலத்தில் வசித்து வந்த, யாழ்ப்பாணம் - நவாலியைச் சேர்ந்த ஜெயநந்தினி கணேசலிங்கம் »11

## மோ.சைக்கிள் மோதி வயோதிபப் பெண் பலி!

வல்லைவெளியில் துயரம்



யாழ்ப்பாணம், மார்ச் 24
வடமராட்சி - வல்லைவெளிப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
ஊர்காவற்றுறை - புளியங்கூடல் பகுதியைச் சேர்ந்த »11

முச்சந்தி முரளி

"கட்டுப்பாடுகள் போடுற வேகத்தைப் பாக்கேக்க கற்காலத்துக்கு கெதியாப் போடுவம் போல கிடக்கு"

கணினி அமைப்பில் பழுது

## ஆட்பதிவுத் திணைக்களம் இன்று முற்றாக முடங்கும்

கொழும்பு, மார்ச் 24
ஆட்பதிவுத் திணைக்களத்தின் பதிவு நடவடிக்கைகள் அனைத்தும் இன்று முற்றாக முடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆட்பதிவுத் திணைக்களத்தின் கணினிக் கட்டமைப்பில் நேற்று மாலை திடீர் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே, அந்தத் திணைக்களத்தில் பதிவு நடவடிக்கைகள் அனைத் »11

## ஈரான் மீதான தாக்குதல் 5 நாள்களுக்கு நிறுத்தம்!

அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு
ஈரான் ஏற்க மறுப்பு



வொஷிங்டன், மார்ச் 24
ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை எதிர்வரும் ஐந்து நாள்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.
ஹோர்முஸ் நீரிணையை திறக்க மறுக்கும் பட்சத்தில், ஈரானுக்கு எதிராகத் தீவிரமான »11

## கஞ்சா கலந்த மாவா; 2 இளைஞர்கள் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 24
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புத்தூர் பகுதியில் கஞ்சா கலந்த மாவாவுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்காணிப்புப் பணியில் ஈடு »11

வெறுப்புணர்வுகளை விதைக்கும்

## தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராக நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை விதைக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு எதிராக வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.
'வடக்கு கிழக்குப் பெண்கள் கூட்டு' என்ற அமைப்பின் »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4384 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 19 25 63 66 |
| விசேட எழுத்து | K |

### ஹந்தஹண ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1451 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 14 42 53 |

### NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0410 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 0 5 1 3 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2490 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 02 11 37 51 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6142 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 6 3 7 5 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2172 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 26 66 71 74 |
| விசேட எழுத்து | S |

### சுப தவசக்

| | |
|---|---|
| திகதி | 23.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0258 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 37 50 |

# இலங்கையின் அபிவிருத்திக்கு ஆசிய வங்கி கைகொடுக்கும்

## வங்கியின் தலைவர் மசாட்டோ தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 24**

**இலங்கையின் அபிவிருத்தி நோக்கிய மாற்றப் பயணத்துக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாட்டோ காண்டா தெரிவித்துள்ளார்.**

இலங்கையை நேற்றுக் காலை வந்தடைந்த அவர் தனது எக்ஸ் தளப் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை தற்போது நெருக்கடியிலிருந்து மீண்டு, நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகரும் முக்கியமான கட்டத்தில் நாம் இங்கு வந்துள்ளோம். இலங்கையின் அபிவிருத்தியின் அடுத்த கட்ட முன்னுரிமை களை ஆழமாகப் புரிந்து கொள்ள, அரசாங்கப் பிரதிநிதிகள், தனியார் துறை மற்றும் உள்ளூர்ச் சமூகத்தினருடன் கலந்துரையாட இந்தப் பயணம் ஒரு முக்கியமான வாய்ப்பாக அமையும். தனியார் துறை தலைமையிலான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் முதலீடுகளை ஈர்ப்பதுடன், உட்கட்டமைப்பு மற்றும் இணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் ஆசிய வங்கி உதவி வருகின்றது. இந்த முன்னுரிமைகளை முன்னெடுத்துச் செல்ல, எதிர்வரும் நாள்களில் தொடர்புடைய தரப்புகளுடன் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் உள்ளேன் - என்றுள்ளார். (க-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | 0850 | M | 9 7 9 9 8 2 |

### Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | 3116 | N | 09 19 67 70 |

### சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | N | 26 45 48 64 | 5277 |

### SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | 0946 | 30 41 42 |

### லக்ன ராசி

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | கடகம் | 02 09 36 56 | 4828 |

### KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | S | 25 | 04 16 58 61 | 2292 |

### அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.03.2026 | திங்கட்கிழமை | E | 06 31 38 49 | 2942 |

# அதிகரிக்கும் வெப்பநிலை; சிறுவர்கள் மிக அவதானம்

## சுகாதாரப்பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் தற்போது அதிக வெப்பநிலை நிலவுவதால், சிறுவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். இதுதொடர்பில் கொழும்பு சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாவது-

வெப்பமான காலநிலையில் சிறுவர்களுக்கு அதிக தூக்கம், உணவில் விருப்பமின்மை, உடல் வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால், அவர்களுக்கு மேலதிகமாக நீர் மற்றும் திரவ உணவுகளை வழங்கவேண்டும்.

இந்த வெப்பமான சூழலில் தேமல், சொறி போன்ற தோல் நோய்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது. எனவே சிறுவர்களை ஒரு நாளைக்கு இரு முறையாவது குளிக்க வைக்கவும். சுமார் 20 நிமிடங்கள் வரை அவர்களை நீரில் இருக்கச் செய்வதன் மூலம், தோல் நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும். அதேவேளை பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஓட்டப்பந்தயங்களில் ஈடுபடும் மாணவர்கள் போதியளவு நீர் பருகாவிட்டால், நீரிழப்பு ஏற்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இதயம் மற்றும் மூளை பாதிக்கப்பட்டு, வலிப்பு, மயக்கம் அல்லது இறப்புக் கூட நிகழலாம். எனவே இதுகுறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்-என்றார். (க-இ)

# பொலிஸாரின் அறிவிப்பென போலியான தகவல் பரவல்

கொழும்பு, மார்ச் 24

இலங்கைப் பொலிஸாரால் வெளியிடப்பட்டதைப் போன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வரும் தகவல் முற்றிலும் போலியானது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. நாட்டின் 'பொருளாதார நெருக்கடிக் காலத்தில் பொதுமக்கள் அவதானிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள்' எனும் தலைப்பில் அந்தத் தகவல் பகிரப்பட்டுள்ளது. இதற்கும் பொலிஸாருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. பொலிஸ் தரப்பிலிருந்து பொதுமக்களுக்கு ஏதேனும் அறிவித்தல் விடுக்கப்படுவதாயின், பொலிஸ் ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பின் கீழ், ஊடக அறிக்கையாக மட்டுமே வெளியிடப்படும். பொலிஸாரின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் மற்றும் யூரியூப் தளம் வாயிலாக அன்றாடச் செய்திகள் புதுப்பிக்கப்படும். பொலிஸ் இலட்சினை அல்லது பெயரைப் பயன்படுத்தி இவ்வாறான திட்டமிட்ட பொய் தகவல்களைப் பரப்புவோர் குறித்து கண்டறிய ஏற்கனவே விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் பரவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் குறித்து, பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் ஊடகப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (க-இ)

# குடிநீருக்கான விலை நிர்ணய வர்த்தமானியை ரத்துச் செய்க!

கொழும்பு, மார்ச் 24

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீருக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் அல்லது தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் உற்பத்தியாளர்கள் சங்கம், ஜனாதிபதி, தொழில் அமைச்சர் மற்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கட்டமைப்பில் தொடர்ந்து எம்மால் தொழிலை முன்னெடுக்க முடியாது. எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டண உயர்வு, போத்தல் தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் சர்வதேச கப்பல் போக்குவரத்துக் கட்டண உயர்வு போன்றவை பெரும் சுமையாக மாறியுள்ளன.

இந்த விலைக் கட்டுப்பாடுகளால் சிறு மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலை தொடர்ந்தால் சந்தையில் பாதுகாப்பான குடிதண்ணீர் விநியோகம் தடைப்படும் அபாயம் உள்ளது- என்றுள்ளது. (க-இ)

# கட்டணத்தை அதிகரிக்கும் வரை சேவையில் ஈடுபடப்போவதில்லை

## தனியார் பேருந்துச் சங்கங்கள் அறிவிப்பு


கொழும்பு, மார்ச் 24

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி மற்றும் விலையேற்றம் காரணமாக, பேருந்துக்கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை சேவையில் ஈடுபடப்போவதில்லை என்று சில தனியார் பேருந்துச் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

பேருந்துக் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தும், அரசாங்கம் அதற்குப் பதிலளிக்கவில்லை. அதனால் நேற்றிலிருந்து சேவையிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளோம் என்றும் அந்தச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை எரிபொருள் விலை அதிகரிப்புக் காரணமாக பேருந்துக் கட்டணச் சூத்திரத்தின்படி தற்போதைய கட்டணத்தில் 10 வீதத்துக்கும் அதிகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எரிபொருள் விலை உயர்வால் விவசாயத்துறைக்குப் பாதிப்பு

## தேசிய விவசாயச் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 24**

**எரிபொருள் விலை உயர்வு காரணமாக நாட்டின் விவசாயத்துறை பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய விவசாயச் சங்கத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

டீசல் மற்றும் பெற்றோல் விலைகள் 80 முதல் 90 ரூபா வால் அதிகரித்துள்ள நிலையில், தற்போதைய அறுவடைக் காலத்தில் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் ஏனைய விவசாய உபகரணங்களுக்கான சேவைக்கட்டணம் ஒரு மணித்தியாலத்துக்கு சுமார் 2 ஆயிரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு ஏக்கர் நெல் அறுவடைக்கான செலவு 25 ஆயிரம் ரூபா வரையிலும், வயல் உழுவதற்கான செலவு 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபா வரையிலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலை இருந்தபோதிலும், போக்குவரத்துச் செலவு அதிகரிப்பைக் காரணம் காட்டி, கொள்வனவாளர்கள் ஒரு கிலோகிராம் நெல்லை 110 ரூபாவுக்கு குறைவான விலையிலேயே கொள்வனவு செய்கின்றனர். இதனால் விவசாயிகள் நட்டத்தையே எதிர்நோக்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# எரிபொருள் பதுக்கிய நால்வர் கைது

கொழும்பு, மார்ச் 24

சட்டவிரோதமான முறையில் எரிபொருளைப் பதுக்கிவைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


நுகேகொடைப் பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், மஹரகம பமுணுவப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 22 லீற்றர் பெற்றோலுடன் 44 வயதுடைய சந்தேகநபரும், நிட்டம்புவ பொலிஸாரால் கம்மல்பிட்டிய பகுதியில் உள்ள சில்லறைக் கடை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், 146 லீற்றர் பெற்றோலுடன் 56 வயதுடைய சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டனர். அதேவேளை நோர்வூட் வென்ச்சர் தோட்டம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 565 லீற்றர் டீசலுடன், 53 வயதுடைய சந்தேகநபரும், மினுவாங்கொட கீனகஹலந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 லீற்றர் பெற்றோலுடன் 53 வயதுடைய சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களுக்கு எதிராக அந்தந்தப் பகுதிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (க-இ)

# விமானநிலையத்தில் ஐவர் நேற்றுக் கைது

கொழும்பு, மார்ச் 24

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வெளிநாட்டு சிகரெட்டுகள், மருந்துகள் மற்றும் வாசனைத்திரவியங்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற ஐந்து பேர் நேற்றுத் திங்கட்கிழமை சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களில் மூவர் மொரட்டுவை மற்றும் மகரகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய இருவர் சீன நாட்டவர்கள் என்பதுடன், அவர்களில் பெண் ஒருவர் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிமிருந்து சுமார் ஒரு கோடியே 16 இலட்சத்து 72 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மென்செஸ்டர் ரகத்தைச் சேர்ந்த 352 கார்ட்டுன் சிகரெட்டுகள் (70,460 சிகரெட்டுகள்), பல்வேறு வகையான மருந்துகள் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் முன்னெடுத்துவருகின்றனர். (எ-41)



# குளத்தில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், மார்ச் 24

அநுராதபுரம் நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுபெத்வெவ குளத்தில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நீரில் மூழ்கியவர் மீட்கப்பட்டு நொச்சியாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் நொச்சியாகம, கட்டுபத்தெத்த பகுதியைச் சேர்ந்தவராவார். சம்பவம் தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (எ-41)

# விபத்தில் சிறுவன் பலி

பதுளை, மார்ச் 24

பதுளை எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவளை வீதியில், தோவ ரஜமஹா விகாரைக்கு அருகில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று, எதிர்த்திசையில் வந்த முச்சக்கரவண்டியுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், முச்சக்கரவண்டிச் சாரதி மற்றும் அதில் பயணித்த நால்வரும் தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக பதுளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் முச்சக்கரவண்டியில் பயணித்த 10 வயதுச் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-41)

# சிங்கக்குட்டிச் சங்கக்கடையள்!

எரியிற வீட்டில பிடுங்கிறது எங்கட ஆக்களுக்குப் பரம்பரைத் தொழிலாப் போட்டுது. ஆனால் சனத்துக்கு நன்மை செய்யிறதுக்கெண்டு, பலநோக்கோட பொது நோக்கை மெயினா வைச்சிருக்கிற சங்கக்கடையளும் இப்ப அந்தத் தொழிலிலை இறங்கியிருக்கிறதை என்னெண்டு ஏற்றுக்கொள்ள ஏலும்? யாழ்ப்பாணத்தில உள்ள, இலாபத்தில இயங்கிற ஒரு சங்கக்கடையிலதான் இப்பிடியான வேலை நடக்குதெண்டு சனங்கள் புலம்புகினம். இப்ப மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடுதானே. அதால சங்கக்கடையள் தங்கட பெற்றோல் செற்றுகளிலையு , கிளையளிலையும் வைச்சு சனத்துக்கு குடுக்கினம். அதிலையும் ஒராளுக்கு இத்தினை லீற்றர் தான் குடுப்பம் எண்டு ஒவ்வொரு சங்கமும் கட்டுப்பாடுகளும் போடுகினம். அப்பிடி ஒரு அளவோட குடுத்தாத்தான் எல்லாருக்கும் குடுக்கலாம். இல்லாட்டிக் கொஞ்சபேர் மட்டும் அள்ளுகொள்ளையா வாங்கிக் கொண்டுபோய் பதுக்க, மற்றவை வெறும் கையை வீசிக்கொண்டு வரவேண்டியதுதான். அப்பிடி பங்கீட்டு முறையில குடுக்கிறது சரியான வேலைதான்.

ஆனால் அந்தப் பங்கீட்டு மண்ணெண்ணெயையும், கடைமுதலாளியள் மாதிரி நிபந்தனையள் போட்டு, தேவையில்லாத சாமான்களைத் திணிச்சுக் குடுக்கிறதெண்டது கூடாத வேலை. அந்தச் சங்கத்துக்கெண்டு ஒரு பெற்றோல் செற்றும் இருக்குது. ஆனால் அங்க மண்ணெண்ணெய் குடுபடேலை. ஆரும் அங்க மண்ணெண்ணெய் வாங்கப் போனால் 'கிளையளில போய் வாங்குங்கோ' எண்டு அனுப்புகினம். கிளையளுக்குப் போற எல்லாருக்கும் சின்ன வயதில அவையள் படிச்சுத் திரிஞ்ச-

*'ஒண்டு ரண்டு மூண்டு நாலு அஞ்சாம் நம்பரடி*
*அச்சுவேலிச் சந்தையில ராங்குபெட்டியடி*
*ராங்குப்பெட்டியைத் திறந்து பாத்தால் சிங்கக்குட்டியடி*
*சிங்கக்குட்டியைப் பிடிக்கப் போனால் சீறிப்பாயுதடி'*

-எண்ட பாட்டுத்தான் உடன நினைவுக்கு வருகுதாம். ஏனெண்டால் உந்தப் பாட்டில வாற சிங்கக்குட்டி மாதிரி சங்கக்கடை மனேச்சர்மார், மண்ணெண்ணெய் வாங்கப் போறவையோட சீறிப்பாயினமாம். 'மற்ற நாளுகளில வேற கடையளில சாமான் வாங்கிறமாதிரி மண்ணெண்ணெயையும் அங்க வாங்கலாமே. மற்றச் சாமான்களுக்கு அந்தக் கடையள், மண்ணெண்ணெய்க்கு மட்டும் தான் உங்களுக்கு சங்கக்கடையளின்ர ஞாபகம் வருமோ?' எண்டு கேக்கினமாம். ஒரு வகையில அவை கேக்கிறதும் நியாயம் தான். ஆனால் சனத்துக்கு ஏத்தமாதிரி, நல்ல சாமான்கள், குறைஞ்ச விலையில இருந்தால் சனம் ஏன் சங்கக்கடையளை விட்டிட்டு வெளிக்கடையளுக்குப் போகப்போயினம்? அந்த அழலில மனேச்சர்மார் இப்ப என்ன செய்யினம் எண்டால், 'ரண்டாயிரம் ரூபாவுக்கு வேற சாமான் வாங்கிற ஆக்களுக்கு மட்டும் தான் மண்ணெண்ணெய்' எண்டு கட் அண்ட் ரைட்டா சொல்லுகினமாம். அதால வேற வழியில்லாமல், தேவையே இல்லாமல் சங்கக்கடையில வேற சாமான்களை வாங்கவேண்டியிருக்கெண்டு சனங்கள் குறைசொல்லுகினம். அதுகளை உரியவை சரிசெய்தால்தான் இனிமேல் சங்கக்கடையள் தங்கட குறையளைத் தீர்க்கிற, இக்கட்டான நேரத்தில எப்பவும் கைகுடுக்கிற கடை எண்ட எண்ணம் சனத்துக்கு வந்து, நெருக்கடி முடிஞ்சபிறகும் தேடி வருவினம். அதைவிட்டிட்டு சங்கக்கடையள் இப்பிடி தவிச்ச முயல் அடிக்கிறது சரியில்லை கண்டியளோ!

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2026 சனிப்பெயர்ச்சிப் பலன்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு ஏப்ரல் 2026 சராசரிப் பலன்களைத் தரும். சில சந்தர்ப்பங்களில், பலன்கள் பலவீனமாக இருக்கலாம். சில விஷயங்களில் அதிக கவனம் தேவைப்படும். விருச்சிக ராசிக்காரர்களுக்கு ஏப்ரல் 2026 கலவையான பலன்களைத் தரக்கூடும்.

வேலையில் இருப்பவர்களுக்கு மாதத்தின் இரண்டாம் பாதி மிகவும் நன்றாக இருக்கலாம். இந்த மாதம் கல்வியைப் பொறுத்த வரை கலவையான பலன்களைத் தரக்கூடும். ஆனால் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் சில சந்தர்ப்பங்களில் மிகச் சிறந்த பலன்களைப் பெறலாம்.

ராகு மற்றும் கேதுவின் செல்வாக்கால் சில பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் மற்ற சூழ்நிலைகள் சாதகமாக இருப்பதால், இந்த மாதம் வீட்டு விஷயங்களில் மிகச்சிறந்த பலன்களை எதிர்பார்க்கலாம். காதல் உறவுகளுக்கு கலவையான பலன்களைத் தரக்கூடும். கவனமாக செயற்பட்டால், பொருந்தக்கூடிய தன்மை பராமரிக்கப்படும். இந்த மாதம் நிச்சயதார்த்தம் அல்லது திருமணத்தில் முன்னேறுவதற்கு குறிப்பாக உதவியாக இல்லை. திருமண வாழ்க்கையைப் பொறுத்த வரை, இந்த மாதம் சராசரிப் பலன்களைத் தரக்கூடும். நிதி நிலைமை பெரும்பாலும் நேர்மறையான பலன்களைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உங்கள் அந்தஸ்து, சூழ்நிலைகள் மற்றும் பதவிக்கு ஏற்ப நீங்கள் நன்றாக சம்பாதிக்கவும், மரியாதைக்குரிய முறையில் சேமிக்கவும் முடியும். நீங்கள் ஒழுக்கமான வாழ்க்கை முறையையும், உங்கள் உடல் இயல்புக்கு ஏற்ற உணவு முறையையும், வாழ்க்கை முறையையும் கடைப்பிடித்தால் மட்டுமே நல்ல ஆரோக்கியத்தை எதிர்பார்க்க முடியும். சிறிது கவனக்குறைவு கூட உங்கள் ஆரோக்கியத்தைப் பலவீனப்படுத்தும். இந்த மாதம் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி மேம்படும். இதனால் கடந்த கால பிரச்சினைகளைச் சமாளிக்கமுடியும். சீரான ஆரோக்கியத்தைப் பராமரிக்க யோகா மற்றும் உடற்பயிற்சியுடன் சீரான உணவு மற்றும் வாழ்க்கைமுறையைப் பராமரிக்கவும்.



## விருச்சிகம்

**பரிகாரம்: வேப்பச் செடிக்குத் தொடர்ந்து தண்ணீர் கொடுங்கள்.**




## சொத்தா? உறவா? பெறுமதியானது

திராட்சைத் தோட்ட உரிமையாளர் தன் தோட்டத்தை குத்தகைக்கு கொடுத்துவிட்டு பெரும்பயணம் சென்றார். பின் ஒருநாள் விளைச்சலின் பங்கைப் பெற்றுவர பணியாளர்களை அனுப்பினார். அந்தப் பேராசை கொண்ட குத்தகைக்காரன் அவர்களைக் கல்லால் எறிந்தும் கொலை செய்தும் விரட்டிவிட்டான். இறுதியாகத் தோட்ட உரிமையாளர் தன் மகனை அனுப்ப 'இவன்தான் சொத்துக்குரியவன் இவனைக் கொன்று விடுவோம்' என்று அப்படியே செய்தார்கள். பின்னர் உரிமையாளர் கொடிய குத்தகைக்காரனைக் கொன்று சொத்தை நற்பணியாளரிடம் ஒப்படைத்தான். கடவுள் எமக்கு உறவுகள், சொத்துகளைத் தந்திருப்பது அன்பு செய்யவும், பாதுகாத்து பலன்களைப் பகிர்ந்து வாழவுமே. இந்த எதிர்பார்ப்பை உடைத்தெறிந்து மேலும் அபகரிக்கின்றபோது உறவுகள் பிளவுபட்டு மனமுடைந்து வாடும் நிலை தோன்றுகிறது. நம்பிக்கைத் துரோகம் புரிந்து இரத்த உறவுகளையே ஏமாற்றி மனச்சாட்சியையும், இறைநீதியையும் சாகடிக்கும் பேராசைப் போக்குகள் இறைபயமின்றி மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்தவரின் சொத்துகள் மட்டிலுள்ள பேராசையும், பொறாமையுமே இந்த இழிவான நிலைக்கு இட்டுச் செல்கிறது. சொத்தா உறவா பெறுமதி வாய்ந்தது? சிந்திப்போம். கடவுள் எதிர்பார்ப்பது உன் கடமையைச் செய்து உனது தலைவனின் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக்கொள். மனிதத்தைப் பாதுகாத்துக்கொள். பிறரது உயர்வில் மகிழ்வு கொள். எப்போதும் நன்றியாயிரு என்பதாகும். இறைவன் எம்மிடம் இறுதிநாளில் கணக்குக் கேட்கும் போது நீர் ஒப்படைத்த வாழ்வு எனும் தோட்டத்தின் விளைச்சல் இதுதான் என்று எமது புண்ணியங்களை ஒப்படைப்போம்.

**● எஸ்.யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**

# போதைப்பொருள் விற்பனை; சந்தேகநபர்கள் நால்வர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24

மல்லாகம் குளமங்கால் வீதியிலுள்ள, கள்ளுத்தவறணைக்குள் போதைப்பொருள் விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வர், குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

மல்லாகம் நீதிமன்றத்துக்கு அண்மையில் இயங்கி வரும் இந்தக் கள்ளுத்தவறணைக்கு வருவோர் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதுடன், போதைப்பொருள் வியாபாரங்களிலும் ஈடுபடுகின்றனர் என்றும், இந்தக் கள்ளுத்தவறணையை உடனடியாக அங்கிருந்து அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப்பகுதி மக்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தனர். வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாண மதுவரித் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் தமது கோரிகை மனுவைக் கையளித்துள்ளனர். (க-66)

# பல கொள்ளைச் சம்பவங்கள்; பெண் உள்ளிட்ட ஐவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 24

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நீண்டகாலமாக பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், பெண் உள்ளிட்ட ஐவர் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பரிசோதகர் றுவான்தரங்க,பொலிஸ் பரிசோதகர் சிறீவன்ச பொலிஸ் சாஜன்ட் அஜித், பொலிஸ் சாஜன்ட் சுசந்த, பொலிஸ் சாஜன்ட் ஜனன் உள்ளிட்ட குழுவினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2025ஆம் ஆண்டு தொடக்கம் இரணைப்பாலை, மந்துவில், 9ஆம் வட்டாரம், சிவநகர் போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் வழங்கிய முறைப்பாடுகளுக்கமைவாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மந்துவில் பகுதியில் வீட்டை உடைத்து 20 பவுண் நகை மற்றும் தொலைபேசிகள் கொள்ளையிடப்பட்டன. கொள்ளையர்கள் அந்தத் தொலைபேசியைப் பயன்படுத்திய நிலையில், சந்தேகநபர் ஒருவரைப் புதுக்குடியிருப்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கொள்ளையிட்ட நகைகள் அனைத்தும் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவரால் புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் அடைவு வைக்கப்பட்டதுடன், விற்பனையும் செய்யப்பட்டுள்ளது. ஒரு பகுதி நகைகள் தற்போது மீட்கப்பட்டன. பெண் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்கள் விளக்கமறியலிலும், இரு சந்தேகநபர்கள் பொலிஸ் காவலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (க-19)

# 400 லீற்றர் டீசலுடன் யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். மருதனார்மடம் பகுதியில், 400 லீற்றர் டீசலுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்புநிலையத்தில் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டு, உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லப்படுகின்றது என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிதர்சனுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட நபர் நுவரெலியாவைச் சேர்ந்தவர் என்றும், இவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வேலை செய்து வருகின்றார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (க-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# சிக்கனமே கேடயம்!

வளைகுடாப் போர் மேகங்கள் வெறும் செய்திகளாக மட்டும் நின்றுவிடாமல், இலங்கைத் தீவின் சமையலறைகளையும், வீதிகளையும் தட்டுப்பாடுகளால் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. போரின் தாக்கம் ஒரே இரவில் முடிந்துவிடாது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விடுத்துள்ள எச்சரிக்கையும், மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்காவிட்டால் நிலைமையைச் சமாளிக்கமுடியாது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் விடுத்துள்ள வேண்டுகோளும் சாதாரணமானவை அல்ல. இவை நாடு மீண்டும் ஒரு பெரும் எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடியின் விளிம்பில் நின்று கொண்டிருப்பதையே பறைசாற்றுகின்றன. கச்சா எண்ணெய்க் கப்பல்கள் வருகையில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் உலகச் சந்தையில் நிலவும் விலை ஏற்றம் என்பன, ஏற்கனவே நட்டத்தில் இயங்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும், தத்தளிக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் தாங்க முடியாத சுமையினை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நெருக்கடி என்பது வெறும் எரிபொருளுடன் மட்டும் நின்றுவிடப்போவதில்லை. இது ஒரு சங்கிலித் தொடர் போன்றது. எரிபொருள் விலை அதிகரிக்கும் போது போக்குவரத்துச் செலவு உயரும், அது சந்தையிலுள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலையை விண்ணைத் தொடச்செய்யும். மறுபுறம், மின்சார உற்பத்திக்குத் தேவையான நெப்தா எரிபொருளுக்குப் பதிலாக அதிக விலையுடைய டீசலைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்போது, மின்சாரக் கட்டண உயர்வும் தவிர்க்கமுடியாததாகிவிடும். இத்தகைய இரட்டைமுனைத் தாக்குதல், ஏற்கனவே பொருளாதாரச் சரிவிலிருந்து மீளத் துடிக்கும் சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை முற்றாகச் சிதைத்து, அவர்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் அபாயம் நிழலாடுகின்றது. 'ஒரு விளக்கையாவது அணைத்து ஒத்துழைப்புத் தாருங்கள்' என்ற அதிகாரிகளின் கோரிக்கை, நாம் மீண்டும் ஒரு இருண்ட காலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையே உணர்த்துகின்றது.

அரசாங்கம் எவ்வளவுதான் மானியங்களை வழங்கினாலும், ஒரு மாதத்திற்கு 20 பில்லியன் ரூபா வரையான சுமையை நீண்ட காலத்திற்குத் தாங்குவது நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் முடக்கிவிடும். எனவே, அரசாங்கம் கியூ.ஆர். குறியீட்டு முறையினூடாக விநியோகத்தைக் கட்டுப்படுத்த முனையும் அதேவேளை, பொதுமக்களாகிய நாமும் உணர்வுபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டிய தருணம் இது. தேவையற்ற பயணங்களைத் தவிர்த்தல், மின்சாரப் பயன்பாட்டை ஆகக்குறைந்த மட்டத்திற்கு வரையறுத்தல், மற்றும் வீதிவிளக்குகள் போன்ற பொதுப் பயன்பாடுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் என்பன வெறும் ஒத்துழைப்பு மட்டுமல்ல; அது நம்மை நாமே தற்காத்துக் கொள்வதற்கான தார்மீகக் கடமையுமாகும்.


நெருக்கடி முற்றிய பின்னர் கவலைப்படுவதை விட, இப்போதிருந்தே ஒவ்வொரு துளி எரிபொருளையும், ஒவ்வொரு யுனிட் மின்சாரத்தையும் ஒரு சேமிப்பாகக் கருதிச் செயற்படவேண்டும். அரச நிறுவனங்கள் தொடங்கி சாதாரண வீடுகள் வரை 'எரிசக்திச் சிக்கனம்' என்பது ஒரு தற்காலிகச் செயற்பாடாக இல்லாமல், ஒரு வாழ்வியல் முறையாக மாறவேண்டும். தியாகங்கள் இன்றி இந்த இக்கட்டான சூழலை நாம் கடந்துவிட முடியாது. ஆட்சியாளர்கள் தூரநோக்குடன் மாற்று வலுசக்தித் திட்டங்களை நோக்கி நகரவேண்டிய அதேவேளை, மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் சிறு சிக்கனங்களே தேசத்தைப் பெரும் பொருளாதாரப் படுகுழியில் இருந்து காப்பாற்றும் ஒரே கேடயமாக அமையும்.



## பொய்யாமொழி


**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

**பொருள்:** வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவிசெய்யும் பொருட்டே ஆகும்.



நடுநிலை

# திருமலை எண்ணெய்க் குதங்களை நவீனமயப்படுத்த நிதி ஒதுக்கீடு!



**கொழும்பு, மார்ச் 24**

**இரண்டாம் உலகப்போரின்போது நிர்மாணிக்கப்பட்ட திருகோணமலை எரிபொருள் தாங்கி வளாகத்தை நவீனமயமாக்குவதற்காக பொற்றோலியம் கூட்டுத்தாபனம் 32 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுள்ளது.**

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் நீண்டகால கோட்பாட்டின் ஒரு பகுதியாக, திருகோணமலையில் எண்ணெய்நீர்த்தேக்கங்களை விரிவாக மேம்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. சிலோன் பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் ஏற்கனவே பல குதங்களை புதுப்பித்துள்ளது. திருகோணமலையை ஒரு மூலோபாய எரிசக்தி மையமாக மாற்றுவதற்காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராஜியம் ஆகியவற்றுக்கு இடையே கையெழுத்திடப்பட்ட ஒரு முக்கிய முத்தரப்பு ஒப்பந்தத்துக்கு இணங்க இந்த புதுப்பித்த செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கைக்கு மலிவு விலையில் எரிசக்தி கிடைப்பதை உறுதி செய்வதையும், எதிர்கால எரிசக்தி திட்டங்கள் மூலம் ஏற்றுமதி வருவாயை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட எரிசக்தி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. (எஇ)

## அரபு நாடுகளின் தூதுவர்கள் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 24

இலங்கை மற்றும் அரபு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடனான நட்புறவுக் கலந்துரையாடல், கொழும்பிலுள்ள சவுதி அரேபியத் தூதரகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற கலந்துரையாடலில், பல்வேறு அரபு நாடுகளின் தூதுவர்கள், தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். நோன்புப் பெருநாளில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஒற்றுமை, அன்பு மற்றும் சகோதரத்துவம் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் இனிப்பு வகைகள் விருந்தினர்களுக்குப் பரிமாறப்பட்டன. (க-இ)

## கூட்டுறவாளர்களுக்கு ஒருநாள் விடுமுறை ?

யாழ்ப்பாணம், மார்ச் 24

அரச ஊழியர்களுக்கு வாராந்தம் புதன்கிழமைகளில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதைப் போன்று, கூட்டுறவுத் துறையினருக்கும் ஒரு நாள் விடுமுறை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவை மற்றும் ஏனைய கூட்டுறவுப் பணியாளர்களின் நலன்கருதி வாரத்தில் சனிக்கிழமை முழுநாள் விடுமுறையை வழங்க சில கூட்டுறவுச் சங்கங்கள் ஆலோசித்து வருகின்றன. எனவே கூட்டுறவுத் துறையினருக்கும் உரிய நாளைத் தெரிவுசெய்து விடுமுறையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-17)

## மனுத்தாக்கல்

அரசு புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

# கிளினிக் நோயாளர்களுக்கு இரு மாதங்களுக்கு மருந்து

அரசாங்க மருத்துவமனைகளில் கிளினிக்குகளுக்கு வருகைதரும் நோயாளர்களுக்கு ஒரே தடவையில் இரண்டு மாதங்களுக்குரிய மருந்துகளை வழங்குமாறு, சுகாதாரப்பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-நாட்டில் நடைமுறையிலுள்ள எரிசக்தி முகாமைத்துவத்தைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு ஏதேனும் அவசரத்தேவை ஏற்படின் வழமை போன்று கிளினிக்குகளுக்குச் செல்லமுடியும். அதேவேளை மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை நடவடிக்கைகள் வழமைபோன்று முன்னெடுக்கப்பட்டுவருகின்றன-என்றார். (சு-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுபோக நெற்செய்கையாளர்களுக்கு தடையின்றி எரிபொருள் விநியோகம்

**முல்லைத்தீவு, மார்ச் 24**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச சிறுபோக நெற்செய்கையாளர்கள் தடையின்றி எரிபொருளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.சுஜீவறூபன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விவசாயிகள் தட்டுப்பாடின்றி எரிபொருளைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக, ஒரு ஏக்கருக்கு 20 லீற்றர் டீசலுக்கான அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டு வருகின்றது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆயிரத்து 148 விவசாயிகள் 2 ஆயிரத்து 435 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். தற்போது நிலம் பண்படுத்தும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அதே வேளை புதுக்குடியிருப்புக் கமநல சேவைத்திணைக்களத்தில் இருப்பில் உள்ள உரங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு ஏக்கருக்கும் குறைவான செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 25 கிலோ யூரியாவும், இரண்டு ஏக்கருக்கு அதிகமான செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ யூரியாவும் வழங்கப்பட்டு வருகின்றது- என்றார். (க-19)

# பெரிய புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

வீமன்காமம் வடக்கு குருந்தடி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு, பெரிய புராணச் சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் மாலை 7 மணிக்கு இடம்பெறும்.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், சைவப்புலவர்கள் சி.கா.கமலநாதன் க.கைலநாதன், ச.முகுந்தன், பொன்.சந்திரவேல், இளஞ்சைவப்புலவர்கள் ச.நவநீதன், நித்திய பாபுதரன், த.மனோஜ்குமார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



யாழ்.அன்னசந்திர வீதியின் ரயில் கடவையூடான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதால், அந்தப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேரில் சென்று ஆராய்ந்தார். (க-17)

# வாராந்தச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தினர் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத் தொடரின் 49ஆவது சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும். சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சைவப் புலவர் கலாநிதி ஏ. அனுசாந்தன் ‘விந்தம்பிலம்புகு படலம்’ எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம், வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



# அர்ஜுன, தம்மிக்கவுக்கு எதிராக மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

கொழும்பு, மார்ச் 24

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சுமார் 800 மில்லியன் ரூபா நிதி இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் அவரது சகோதரர் தம்மிக ரணதுங்க ஆகியோருக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவராகப் பணியாற்றிய அவரது சகோதரர் தம்மிக ரணதுங்க ஆகியோர், உள்ளூர் ஒப்பந்தங்களைத் தன்னிச்சையான முறையில் கையாண்டனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சந்தை விலையை விட அதிக விலைக்கு ஒப்பந்தங்களை அனுமதித்ததன் மூலம், அரசாங்கத்துக்கு சுமார் 800 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விரிவான விசாரணைகளை முன்னெடுத்த சட்டமா அதிபர் திணைக்களம், போதிய சான்றுகளின் அடிப்படையில் இருவருக்கும் எதிராக, மேல் நீதிமன்றத்தில் உத்தியோகபூர்வமாகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது.

எரிபொருள் விநியோகம் மற்றும் கொள்வனவு நடைமுறைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணைகளில் இந்த நிதி மோசடி தெரியவந்துள்ளது. (க-இ)

# வீடுகள் பகிர்தலில் முறைகேடு; முன்னாள் பணிப்பாளர் கைது

கொழும்பு, மார்ச் 24

நகர அபிவிருத்தி அதிகாரசபையின், கொழும்பு நகர் மீளுருவாக்கல் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராகப் பணியாற்றிய, இராணுவத்தின் முன்னாள் பிரிகேடியர் ஒருவர் ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டில், கொழும்பு சிறிசந்த செவன வீடமைப்புத் தொகுதியில் உள்ள 22 வீடுகளை முறையற்ற வகையில் ஒதுக்கீடு செய்தமை தொடர்பாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அமைச்சரவையால், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. எனினும் தகுதியற்ற நபர்களுக்கு இந்த வீடுகள் பகிரப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், நிறுவப்பட்ட கொள்கைக் கட்டமைப்புக்குப் புறம்பாக இந்த ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (க-இ)





மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் இரண்டாம் பங்குனித்திங்கள் உற்சவம் நேற்றுக் காலை 5 மணிக்கு ஆரம்பமானது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்று பொங்கல் மடை பரவி தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (க-17,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தனியார் பஸ்களுக்கான எரிபொருளுக்கு விசேட ஒழுங்கு




**யாழ்ப்பாணம், மார்ச் 24**
**வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்குத் தேவையான டீசலை, எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் 'கியூ.ஆர்' முறைமை ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கான விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது
தற்போதைய நெருக்கடியான சூழலைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தால் எரிபொருள் விநியோகத்தில் சில மட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பொதுப்போக்குவரத்துச் சேவைகள் எவ்விதத் தடையுமின்றித் தொடர வேண்டும் என்பதற்காக, ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மாத்திரம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.
நடைமுறைச்சிக்கல்களைத் தவிர்த்து தனியார் பஸ் உரிமையாளர்களின் வசதி கருதி, தற்போது வடக்கு மாகாணத்திலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் அவர்கள் தமக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மேற்கொண்டுள்ளது.
ஒவ்வொரு தனியார் பஸ்ஸின் வழித்தட அனுமதியை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் இருவழிப் பயணத்துக்குத் தேவையான எரிபொருளின் அளவு துல்லியமாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பீட்டுக்கு அமைய ஒவ்வொரு பஸ்ஸுக்குமான உரிய எரிபொருள் ஒதுக்கீடு தீர்மானிக்கப்பட்டு, தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அதற்கான விசேட 'கியூ.ஆர்' வழங்கப்படும்.
அந்த 'கியூ.ஆர்' குறியீட்டைப் பயன்படுத்தி, அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட டீசலை எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இனிவரும் காலங்களில் தடையின்றிப் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார். (எ-113)

## பஸ் சேவைகள் நிறுத்தும் பணிப் புறக்கணிப்பல்ல!

தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24
பஸ் சேவைகளில் இருந்து விலகியமை ஒரு வேலை நிறுத்தப்போராட்டமல்ல. பழைய கட்டணத்தில் பஸ்களை இயக்க முடியாது என்பதாலேயே அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் ரிவித்துள்ளதாவது
அரசாங்கம் நேற்று (நேற்றுமுன்தினம்) முதல் புதிய கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். அவ்வாறு செய்யாததே இந்த நிலைமைக்குக் காரணம். 90 சதவீதத்துக்கும் அதிகமான பஸ்கள் சேவையிலிருந்து விலகியுள்ளன. எவருக்கும் அழுத்தம் கொடுக்கப்படவில்லை. ஒரு சில பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. 'சிசு செரிய' பாடசாலை பஸ் சேவைகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்பட்டன. இதை ஒரு வேலைநிறுத்தப் போராட்டமாக நாம் கூறவில்லை. நட்டத்தை ஈடுகட்ட முடியாததால் சேவையிலிருந்து விலகியுள்ளோம். கடந்த காலங்களில் எரிபொருள் விலை உயர்ந்தவுடன் அதிகாரிகள் எம்முடன் கலந்துரையாடினர். ஆனால் இம்முறை எவ்வித பேச்சுவார்த்தையும் இன்றி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் அமைச்சும் செயற்பட்டுள்ளன. எம்முடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும் என அரசாங்கத்துக்கு ஒரு சிறிய சமிக்ஞையை வழங்கியுள்ளோம்என்றார். (எ-இ)

## சுற்றுலாத்துறையினருக்கு விசேட எரிபொருள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்.மாவட்டத்தில் சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்து இயங்கும் சுற்றுலாத்துறை சேவை வழங்குவோரின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு விசேட எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஜே.விவேகானந்தன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
சுற்றுலாத் துறையைத் தடையின்றித் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இந்த விசேட விநியோக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த விசேட எரிபொருள் விநியோகத் திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்து கொள்வதற்கும், தமக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் வடக்கு மாகாணச் சுற்றுலாத் துறைப் பணியகத்தின் தலைவரைத் தொடர்பு கொள்ள முடியும் என்றார். (எ-66)

## குருதிக்கொடை முகாம்



யாழ்ப்பாணம், மார்ச் 24
முன்னாள் வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலர் கைலாசபதி ஜெயக்காந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் வளாகப் பேரவைச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு உயிர்களைக் காக்கும் மனிதாபிமானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-66)



## விமான சேவைகளுக்கான எரிபொருள் கையிருப்பில்

விமான சேவைகளை எதிர்வரும் 16ஆம் திகதிவரை முன்னெடுப்பதற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அறிவித்துள்ளது. இது தொடர்பில் சிவில் வானூர்திப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் தம்மிக ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளதாவது சர்வதேச விமானங்க ளுக்கான எரிபொருள் எதிர்வரும் 16ஆம் திகதிவரை போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. உள்நாட்டு வானூர்திப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் சிறிய ரக வானூர்திகளுக்குத் தேவையான எரிபொருள், அடுத்த மூன்று மாதங்களுக்குப் போதுமான அளவு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. விமான எரிபொருள் கையிருப்பு மற்றும் தரவுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்காக "தேசிய விமான எரிபொருள் ஒருங்கிணைப்புப் பிரிவு" எனும் விசேட குழுவொன்றுநியமிக்கப்பட்டுள்ளது என்றார்.

## ஆய்வுகூடத்தில் வெடிப்பு

ஆசிரியை, மாணவர்கள் காயம்

கொழும்பு, மார்ச் 24
பண்டாரவளை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் விஞ்ஞான ஆய்வு கூடப் பரிசோதனையின் போது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் ஆசிரியை ஒருவரும் இரு மாணவர்களும் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் 16 வயதுடைய இரு மாணவிகளும், 48 வயதுடைய ஆசிரியை ஒருவருமே காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் தியத்தலாவ ஆரம்ப மருத்துவமனை மற்றும் பதுளை போதனா மருத்துவமனை என்பவற்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் நியமனம்

கொழும்பு, மார்ச் 24
நிர்வாக சேவை அதிகாரியான திமுத் பஷித அத்தபத்து, தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்த நியமனம், நாட்டின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 22 ஆம் சட்டத் திருத்தத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள தனியுரிமைக் கட்டமைப்பை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதிலும் ஒரு முக்கியமான படியாகக் கருதப்படுகிறது என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிபோடுவதை விடுத்து பசியைப் போக்குங்கள்

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 24
ராஜபக்சக்கள் 18 பில்லியன் டொலரை திருடிவிட்டதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், தற்போது மக்கள் மீது சுமைகளைச் சுமத்திவிட்டுத் தனது இயலாமையை மறைக்க எம்மீது பழி சுமத்துகின்றது என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள் குறித்து அவர் அவர் மேலும் தெரிவிக்கையில்,உலகச் சந்தை விலையை விட 45 டொலர்கள் அதிக விலை கொடுத்து அரசாங்கம் தற்போது டீசலை இறக்குமதி செய்கிறது. குறைந்த விலைக்கு எரிபொருள் பெறுவோம் எனக் கூறி வந்தவர்கள், இன்று மக்களின் தலையில் சுமையைத் திணிக்கின்றது. கடந்த காலத்தில் எமது அரசாங்கம் கொண்டு வந்த காற்றாலை மற்றும் எல்.என்.ஜி . மின் திட்டங்களை இவர்கள் எதிர்த்திருக்காவிட்டால், இன்று மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது. அரசாங்கம் தொடர்ந்தும் பழி வாங்கும் அரசியலில் ஈடுபடாமல், விவசாயிகளின் உரப் பிரச்சினை மற்றும் மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும்- என்றார். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 11 . 1979



மறைவு 21 . 03 . 2026

### சிவலிங்கம் சிவகஜனி

விவேகானந்த வீதி, மஞ்சத்தடி தெற்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் தற்போதைய வதிவிடமாகவும், ஒட்டுசுட்டான் சிவன் கோவிலடியை முன்னைய வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவகஜனி கடந்த 21.03.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முன்னைநாள் ஒட்டுசுட்டான் "சிவன் ஸ்ரோர்ஸ்" உரிமையாளர் சிவலிங்கம் அன்னலட்சுமி தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மகேஸ்வரி, மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியரின் பேர்த்தியும், சிவகரன், சிவகஜன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜனனி மற்றும் சனார்த்தனியின் அன்பு மைத்துனியும், நிலானன், அட்சயன், யஸ்வினா, சஸ்வினா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2026) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31493) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 10 . 1958



மறைவு 16 . 03 . 2026

### நவரட்னம் சர்வேஸ்வரி (சாந்தி)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்னம் சர்வேஸ்வரி (சாந்தி) கடந்த 16.03.2026 ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், நவரட்னத்தின் அன்பு மனைவியும், பிரசன்னா, பிரதாத், சர்மிலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, மனோகரன், ஈஸ்வரி, மாலா, றஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயலலிதா, அருளானந்தம், கதிர்செந்தாமரை ஆகியோரின் மைத்துனியும், சிவமாறன், சிவாஜினி ஆகியோரின் சித்தியும், சாருஜா, கஜன், ரூபிகா, ரஜிதா, அஸ்வத் ஆகியோரின் பெரியம்மாவும், நிர்சன், வின்சன், விஸ்திகா ஆகியோரின் அத்தையும், ஜெயந்தி, ஆனந்தி (பாப்பா), அருளாளன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2026) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 61048) (N-1)

## மரண அறிவித்தல்



### இராமமூர்த்தி (வைத்தியர்) சந்திரசேகரம் (சந்திரன்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடி வீதியை புகுந்த இடமாகவும் சுவிஸ்லார்ந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமமூர்த்தி சந்திரசேகரன் (சந்திரன்) கடந்த 19.03.2026 வியாழக்கிழமை இயற்கையை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமமூர்த்தி (வைத்தியர்) - அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாகாந்தியின் ஆருயிர் கணவரும், விநித்தா, தனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாசனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருந்தவநாதன், பவலன், குகன் மற்றும் மகேந்திரன் (கொலண்ட்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தேவியின் பெறாமகனும், கணேசமூர்த்தி, சரோஜினிதேவி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், சொர்ணகாந்தி, சிவகுமார், விஜயகுமார், சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்திரலிங்கம், வத்சலாவதி, உதயகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் KREMATORIUM NORDHEIM, KÄFERHOLZ SIRASSE 101,8046 ZÜRICH (சுவஸ்லாந்தில்) நடைபெறும்.

நாளை மஞ்சத்தடி முருகன் கோவிலடி இணுவிலில் அமைந்துள்ள இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

கோவில் வீதி,
மஞ்சத்தடி இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

உருவாய் 19 . 03 . 1954



அருவாய் 22 . 02 . 2026

கடந்த 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் ரதி சந்திரநாதன்

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 27.03.2026 வெள்ளிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முதலிகோவில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டுச்சந்தில் அமெரிக்கா!

# சி.ஐ.ஏ. முன்னாள் பணிப்பாளர் கடுமையான விமர்சனம்

நியூயோர்க், மார்ச் 24

**அல் கொய்தா அமைப்பின் முன்னாள் தலைவர் ஒசாமா பின்லேடனை வேட்டையாடிய நடவடிக்கையை முன்னின்று நடத்திய அமெரிக்க சி.ஐ.ஏ. முன்னாள் பணிப்பாளரும், பென்டகன் முன்னாள் தலைவருமான லியோன் பனெட்டா, தற்போதைய ஈரானிய நெருக்கடிக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒருவரே பொறுப்பு என விமர்சித்துள்ளார்.**

உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் ஹோர்முஸ் நீரிணையை ஈரானியத் தரப்பு தற்போது தனது பிடிக்குள் வைத்துள்ளது. இதனால் உலக சந்தையில் எண்ணெய் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன.

ஈரான் மீதான தாக்குதல்களைத் தொடங்கிய மூன்று வாரங்களுக்குப் பின்னர், அமெரிக்காவால் அந்த நீரிணையைத் திறக்க முடியாமலும், போர் நிறுத்தத்தை எட்ட முடியாமலும் ஒரு இக்கட்டான சூழல் உருவாகியுள்ளது என்று பனெட்டா சுட்டிக்காட்டியுள்ளார்.

"நான் பங்குபற்றிய ஒவ்வொரு தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலும் ஈரான் குறித்துப் பேசும் போதெல்லாம், ஹோர்மூஸ் நீரிணை முடக்கம் பற்றிய விவாதம் வரும். ஆனால், இதற்கு ட்ரம்ப் நிர்வாகம் தயாராக இல்லாதமை அடிப்படை மூலோபாயத் திட்டமிடலின் தோல்வியாகும்" என்று அவர் 'தி கார்டியன்' ஊடகத்துக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ட்ரம்ப் இதை ஒரு 'சிறிய பயணம்' என அழைத்திருந்தார். ஆனால், தற்போது அது அமெரிக்காவைக் கையறு நிலைக்குத் தள்ளியுள்ளது என்று விமர்சிக்கப்படுகிறது.

ஆற்றல் வாய்ந்த அமெரிக்க இராணுவம், அதன் தளபதியான ஜனாதிபதி ட்ரம்பின் போதிய திட்டமிடல் இல்லாத காரணத்தால் தற்போது ஒரு முட்டுச்சந்தில் நின்று கொண்டுள்ளது என்று லியோன் பனெட்டா கடுமையாகச் சாடியுள்ளார். (எ-இ)

## ஈரானிய அரச வானொலி நிலையம் மீதும் தாக்குதல்

தெஹ்ரான், மார்ச் 24

ஈரானிய அரச வானொலி நிலையத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் தெற்கு துறைமுக நகரில் அமைந்துள்ள வானொலி நிலையத்தின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. ஈரான் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 400க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன், அவர்களில் 214 சிறுவர்களும் அடங்குவர் என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பசுபிக் கடலில் நிலநடுக்கம்

லண்டன், மார்ச் 24

பசுபிக் கடலின் தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 6.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படாத நிலையில், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் வெளியாகவில்லை. (எ-இ)



# கச்சா எண்ணெய் வழங்கலை மட்டுப்படுத்தியது 'அரம்கோ'

### நெருக்கடிக்குள் ஆசிய நாடுகள்

ரியாத், மார்ச் 24

உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நிறுவனமான சவுதி அரம்கோ ஏப்ரல் மாதத்துக்காக ஆசிய வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் கச்சா எண்ணெய் விநியோகத்தை இரண்டாவது முறையாகக் குறைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர்ச் சூழல் காரணமாக, ஹோர்மூஸ் நீரிணை ஊடாக மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளே இதற்கு முக்கியமான காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏப்ரல் மாதத்தில் செங்கடலில் அமைந்துள்ள யான்பு துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யப்படும் 'அரப் லைட்' வகை கச்சா எண்ணெய்யை மட்டுமே தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன் விளைவாக, ஆசிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான விநியோகம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் உற்பத்தியும் வரையறுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)



## ஈரான் போருக்கான நிதி வசதி தாராளம்

### அமெரிக்க நிதியமைச்சர் தெரிவிப்பு

நியூயோர்க், மார்ச் 24

ஈரானுக்கு எதிரான போருக்குத் தேவையான நிதி அமெரிக்காவிடம் தாராளமாக உள்ளது என்று அமெரிக்க நிதியமைச்சர் ஸ்கொட் பெசென்ட் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், அமெரிக்கா-ஈரான் போர் நேற்றுடன் 24ஆவது நாளை எட்டியுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க இராணுவத் தலைமையகம் (பென்டகன்) ஈரான் போருக்கு கூடுதலாக 200 பில்லியன் டொலர் நிதி தேவை எனக் கோரிக்கை விடுத்துள்ளமை பேசுபொருளாகியுள்ளது.

இந்தநிலையில், ஈரானுக்கு எதிரான போருக்குத் தேவையான நிதி அமெரிக்காவிடம் தாராளமாக உள்ளது என்றும், அதற்காக அமெரிக்கா மக்கள் மீது கூடுதல் வரிகள் விதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் நிதியமைச்சர் ஸ்கொட் பெசென்ட் தெரிவித்துள்ளார். போர்ச் செலவுகளை அமெரிக்காவால் எளிதாகச் சமாளிக்கமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## இருளில் மூழ்கிய கியூபா

ஹவானா, மார்ச் 24

கியூபாவின் தேசிய மின் கட்டமைப்பான ஹவாகா மின்கட்டமைப்பு மீண்டும் செயலிழந்துள்ளது. இதனால் ஒரு கோடிக்கும் அதிகமான மக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மின்சாரமின்றி முடங்கியுள்ளன. கியூபாவில் இவ்வாறு நடைபெறுவது இது இரண்டாவது முறையாகும்.

மின் செயலிழப்புத் தொடர்பில் கியூபாவின் எரிசக்தி அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில், மின்சார விநியோகத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் பணிகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் காரணமாக, மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதில் கியூபா பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்த எரிபொருள் தட்டுப்பாடே மின் கட்டமைப்பு அடிக்கடி செயலிழப்பதற்கு பிரதான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுப்போத்தல்களுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள விடுதியொன்றில் இருந்து வெளிநாட்டு மதுப் போத்தல்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சித்தங்கேணி மதுவரித் திணைக்களத்தால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த விடுதியில் மதுபான விற்பனைக்கு அனுமதி இல்லாத நிலையிலேயே இந்த கைது நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-27)


## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 12 . 1950



மறைவு 23 . 03 . 2026

### கார்த்தி கணேஸ்

நவாலி அட்டகிரியை பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி கணேஸ் நேற்று (23.03.2026) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்தி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரிக்காவின் அன்புக் கணவரும், சர்மிளா, பிரசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கணகமணி, கண்மலர், சின்னத்துரை, சந்திரன் மற்றும் தேவி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மற்றும் சுரேஸ்குமார் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் வீட்டுக் கிரியைகள் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31011) A

## INVITATION FOR BID 2026/04
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. **The Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha,Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via **PSDG (Tourism work)**
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-03-24 To 2026-04-09 during 09:00 hrs and 15:00 hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman,** Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2026-03- 24 To 2026-04-09 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-03-31 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 02.00 P.M on 2026-04-10 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/ 2026/02 | Establishment of Sanitary Facilities (Toilet & Urinal) at Akkarai Beach | 4.24 | 84 | C8 or above (Building) | 3,000.00 | 43,000.00 | 26.06.2026 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur.
24 /03 /2026

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1952



மறைவு 23 . 03 . 2026

### திருமதி தயாபரசிவம் கமலாதேவி

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாபரசிவம் கமலாதேவி நேற்று (23.03.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தயாபரசிவம் (ஓய்வு பெற்ற மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், உமாதேவி (சிங்கப்பூர்) மற்றும் குமாரவேல் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருச்செந்தூரன் (M.L.T - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் சூளாய் கூட்டுறவு வைத்தியசாலை), சிவகாமி ஆகியோரின் அன்புத் தாயாரும், சஜிதா, செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பைரவி, யதுசியா, அர்ஜீன், குகானந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமரர்களான தியாகராசா, சத்தியமூர்த்தி, சாம்பசிவமூர்த்தி, சோதிநாதன் மற்றும் கனகநாயகம் அமரர்கள் கோமளாதேவி, அன்னரத்தினம் மற்றும் வைகுந்தவாசன், திலகவதியார், வள்ளுவதாசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
'திருச்செந்தூர்' பண்ணாகம், சுழிபுரம்.
தயாபரசிவம் (கணவர்) - 077 6392 643
திருச்செந்தூரன் (மகன்) - 077 271 8877
சிவகாமி (மகள்) - [illegible]

(CR 47273)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 05 . 1938



மறைவு 23 . 03 . 2026

### அமரர் சரவணமுத்து இராமலிங்கபிள்ளை (பிள்ளையார்)

(கணபதி மைந்தன், பிள்ளையார் சாத்திரியார், ஆயுட்கால தலைவர் தர்மகர்த்தாசபை மற்றும் பரிபாலனசபை தொல்புரம் மடத்தடி பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி கோயில்,
ஓய்வுபெற்ற காசாளர் ஐக்கிய வியாபாரச் சங்கம் - Jaffna Co-Operative)

மடத்தடி பிள்ளையார் கோயிலடி தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராமலிங்கபிள்ளை (பிள்ளையார்) அவர்கள் நேற்று (23.03.2026) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேற்பிள்ளை, தர்மநாயகி, கணேஸ்வரி, நகுலேஸ்வரி, சிவனேஸ்வரி, புவனேஸ்வரி, சபாநாயகம் மற்றும் பிரேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, சிவப்பிரகாசம், அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், பங்கயச்செல்வி (London), அபிராமி (வலிமேற்கு பிரதேசபை, சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமரன் (London), நாகராஜா (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜானுகா, கஜானன், விசாகன் (London), அபிலாஷ், கபிஷன் (மாணவர்கள்- சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), மகிஷா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை மாணவி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24-03-2026) செவ்வாய்க்கிழமை காலை 08:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மடத்தடிப் பிள்ளையார் கோயிலடி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
077 034 4242

(CR/47272) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலம்பியாவில் விமான விபத்து 80 இராணுவத்தினர் துயரச் சாவு!

கொலம்பியாவில் இராணுவ விமானமொன்று நேற்று விபத்துக்கு உள்ளானதில், 80 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் என்று கொலம்பிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
இரண்டு படைப்பிரிவுகளைச் சேர்ந்த இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு பயணித்த விமானமே தொழில்நுட்பக் கோளாறு காரணமாக காட்டுப் பகுதியில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.
விமானத்தின் கறுப்புப்பெட்டி மீட்கப்பட்டுள்ள நிலையில், அதை ஆய்வுக்கு உட்படுத்தும் பணிகள் விரைவில் இடம்பெறவுள்ளன. (ம)

## பாணின்...

இதன்படி, பாண் உள்ளிட்ட அனைத்து வெதுப்பகப் பொருள்களும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-ம)

## பொதுமக்களின்...

சமாளிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. புதன்கிழமைகளில் அரச விடுமுறை உள்ளிட்ட திட்டங்கள் நடைமுறைக்கு வந்திருந்தாலும், எரிபொருள் நெருக்கடி அரசாங்கத்தை மேலும் இறுக்க ஆரம்பித்துள்ளது. இதையடுத்தே, எரிபொருள் நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் மேலும் சில கட்டுப்பாடுகளைப் பிறப்பிக்க அராங்கம் தற்போது தீர்மானித்துள்ளது.
வலுசக்திப் பாதுகாப்பைப் பேணுவது தொடர்பில் ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், இலத்திரணியல் பெயர்ப் பலகைகளுக்குத் தற்காலிகத் தடை விதித்தல், தேவையற்ற மின் விளக்குகளை அணைத்து வைத்தல், இரவுநேர மின்நுகர்வில் உச்சமான முகாமைத்துவத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட திட்டங்கள் தொடர்பில் பலிசீலனை செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டி, அவர்களிடம் இருந்து ஒத்துழைப்பைப் பெறுமாறு ஜனாதிபதி அநுர, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.
வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கபில சி. கே.பெரேரா, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் டி.பாஸ்கரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ-ம)

## பேருந்துக்...

இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சடுதியாக அதிகரித்துள்ளது.
இது தொடர்பில் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
எரிபொருள் விலையேற்றம் காரணமாக போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஓட்டோக்களுக்கான வாடகைக் கட்டணமாக முதலாவது கிலோமீற்றருக்கு 110 ரூபாவும், ஏனைய ஒவ்வொரு கூடுதல் கிலோமீற்றருக்கு 90 ரூபாவும் அறவிடப்படும்.
அத்துடன், பேருந்துக் கட்டணத்தை 12.19 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, தற்போது 27 ரூபாவாகக் காணப்படும் ஆகக்குறைந்த பேருந்து கட்டணம் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம)

## ஆட்பதிவுத்...

தும் இன்று முற்றாக முடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சாதாரண சேவைகள் மட்டுமல்லாமல், ஒருநாள் சேவைகளும் இன்று இயங்காது என்றும் அந்தத் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (அ-ம)

## இலங்கைக்கு...

இலங்கையில் உள்ள ஈரானிய தூதரகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஈரானைப் பொறுத்தவரை இலங்கை கண்ணியத்துக்குரிய மிக நெருக்கமான நட்புநாடு. எண்ணெய் அல்லது வேறு அத்தியாவசியப் பொருள்களை இலங்கை கோரும் பட்சத்தில் அதை வழங்குவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். இலங்கையில் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.
ஈரான் தனது நட்பு நாடுகளுக்காக ஹோர்முஸ்நீரிணையைமூடவில்லை. எமது எதிரிகளுக்கே ஹோர்முஸ் நீரிணை முற்றாக மூடப்பட்டுள் ளது.
ஈரானில் உள்ள இலங்கையர்கள் தமது நாட்டுக்குத் திரும்பி விரும்பினால் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம் - என்றார். (அ-ம)

## மோ.சைக்கிள்...

பவரத்தினம் தவமலர் (வயது-70) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு கடந்த 18ஆம் திகதி மகனுடன் மோட்டார்சைக்கிளில் சென்றிருந்த அவர், நேற்றுமுன்தினம் அங்கிருந்து தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார். இதன்போது வல்லைவெளியில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலில் வழிபட்டுவிட்டு, எதிரேயுள்ள பாதசாரிக் கடவையால் வீதியைக் கடந்தபோது, அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் அவரை மோதியுள்ளது. இதையடுத்து, படுகாயங்களுடன் மீட்கப்பட்ட அவர், அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும், சிறிது நேரத்திலேயே உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கஞ்சா...

பட்ட பொலிஸார், சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த இரண்டு இளைஞர்களை இடைமறித்துச் சோதனைசெய்த போதே, அவர்கள் இருவரின் உடைமையிலும் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-23)

## தமிழ்...

ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.
தமது போராட்டம் தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:-
நாட்டின் ஒற்றுமை, ஜனநாயகப் பண்புகள் மற்றும் மக்களின் பாதுகாப்பை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பில் உள்ள அரசியற் தலைவர்கள் சமீபத்தில் பொதுத் தளங்களிலும், சமூக ஊடகங்களிலும் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் நாங்கள் ஆழ்ந்த கரிசனையைக் கொண்டுள்ளோம்.
மக்களை இழிவுபடுத்தும் வகையில் மனித மரியாதைக்கு எதிரான சொற்கள் பயன்படுத்தப்படுவதை எக்காரணம் கொண்டும் நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இத்தகைய வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையையும், நல்லிணக்கத்தையும் சீர்குலைப்பதுடன் பிரதேச மற்றும் இன அடிப்படையிலான பிளவுகளைத் தீவிரப்படுத்துகின்றன. இது நாட்டின் அமைதிக்கும், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் நேரடி அச்சுறுத்தலாகவும் அமைகின்றன.
மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினைகளைப் பொறுப்புடன், நாகரிகத்துடன் முன்வைத்துத் தீர்வுகளை உருவாக்கவேண்டியவர்கள். ஆனால், அதற்குப் பதிலாக வெறுப்பு, இழிவு மற்றும் பிரிவினை உணர்வுகளைத் தூண்டும் கருத்துக்களை வெளியிடுவது பொறுப்பின்மையின் வெளிப்பாடாகும்.
அரசியல்வாதிகள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தும் போதெல்லாம் ஆதிக்க சிந்தனைகளை பிரதிபலிக்கும் வகையிலான மொழியையும், அணுகுமுறையையும் முற்றாகக் கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் - என்றனர். (அ-ம-66-20)

## ஈரான்...

தாக்குதல்கள் நடத்தப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ட்ரம்பின் அவகாசம் நேற்று இரவுடன் நிறைவுக்கு வந்த நிலையில், மத்திய கிழக்கில் போர் உச்சம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது என்றே போரியல் வல்லுநர்கள் கணித்திருந்தனர்.
இவ்வாறான நிலையிலேயே, எவரும் எதிர்பாராத விதமாக ஐந்து நாள்கள் போர் நிறுத்தத்தை ட்ரம்ப் அறிவித்துள்ளார். கடந்த இரண்டு நாள்களாக ஈரானிய தலைவர்களுடன் மிகவும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றும், அந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே தற்காலிகப் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
எனினும், அதிபர் ட்ரம்பின் கருத்தை ஈரான் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. போர் நிறுத்தம் தொடர்பில் அமெரிக்காவுடனோ அல்லது வேறு தரப்புகளுடனோ நாங்கள் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. போர் நிறுத்தம் தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை எமக்கே உள்ளது என்று ஈரான் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## துருக்கியில்..

(வயது-60) மற்றும் அவரது மகன் விபூசன் கணேசலிங்கம் (வயது-28) மற்றும் ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த சிவாஸ்கரன் சுகந்தி (வயது-47) ஆகியோரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.
துருக்கியில் இடம்பெற்ற பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பின்னர், சுவிட்சர்லாந்துக்குச் செல்வதற்காக விமான நிலையத்துக்குப் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீச்சல் வீரர் நவரத்தினசாமியின் 72ஆவது வெற்றிநாள் நிகழ்வுகள்

இந்தியா தமிழகத்துக்கும், இலங்கைக்கும் இடையிலான கடற்பகுதியை முதன் முதலில் நீந்திக் கடந்து சாதனை படைத்த முருகுப்பிள்ளை நவரத்தினசாமியின் 72ஆவது வெற்றி நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை தொண்டைமானாற்றில் இடம்பெறவுள்ளன.

தொண்டைமானாற்றைச் சேர்ந்த நீச்சல் வீரரான முருகுப்பிள்ளை நவரத்தினசாமி தனது 44ஆவது வயதில், 1954ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனைப் பயணத்தை வல்வெட்டித்துறையில் இருந்து ஆரம்பித்தார். மறுநாள் தமிழ்நாட்டின் கோடியக் கரையில் நிறைவு செய்தார். இதன்மூலம் 34 மைல் தூரத்தை 27 மணித்தியாலங்களில் கடந்து முதலாவது நீச்சல் வீரன் என்ற சாதனையைப் படைத்தார். இந்தச் சாதனையின் 72ஆவது ஆண்டை நினைவுறுத்தும் வகையில், தொண்டமானாறு இளைஞர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் வெற்றி நாள் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வை முன்னிட்டு, தொண்டமானாறு பாலத்துக்கு அருகாமையில் அவரது சிலை அமைக்கப்பட்டுள்ள இடம் நேற்றுமுன்தினம் சிரமதானம் செய்யப்பட்டது. (க-100)




## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம் அராலி வீதியில் பிரதான வீதி முகப்புடன்
யாழ்நகரில் இருந்து மூன்று கிலோ மீற்றருக்குட்பட்ட
பகுதியில் சமுத்திர பல்கலைக் கழகத்திற்கு
ஒதுக்கப்பட்ட காணிக்கு முன் காணி.
8 (எட்டு) பரப்பு காணி விற்பனைக்குண்டு
4 பரப்பாகவும் பிரித்து வழங்கப்படும்.
களஞ்சியசாலை, கடைத்தொதிகள்
வீடு கட்ட உகந்த இடம். தரகர் தேவையில்லை
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(CS 31502)

077 482 5587, 021 225 6883

## வீடு வாடகைக்கு

சுதுமலை வடக்கு மானிப்பாய் நகருக்கு அண்டிய பகுதியில்
இரண்டு அறைகளுடன் கூடிய சகல வசதிகளுடன் கூடிய
அனெக்ஸ் (Annex) வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
மேலதிக விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 4468 422
077 2619 204

(CS 31501) A

# ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ணம் கைப்பற்றியது யாழ்ப்பாணக்கல்லூரி

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் , வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான, ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், யாழ்ப்பாணக்கல்லூரி 37 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

யாழப்பாணக் கல்லூரி அணி சார்பாக சங்கீர்த் 60 பந்துகளை எதிர்கொண்டு 45 ஓட்டங்களைப் பெற்றார். கென்றெக்சன் 51 ஓட்டங்களை எதிர்கொண்டு 38 ஓட்டங்களைப் பெற்றார். அதேவேளை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிசார்பாக ஸ்ரிப் ஆதித்யா 3 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

50 பந்துபரிமாற்றங்களின் நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி 9 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. 206 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் துடுப்பாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 44.1பந்து பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 168 ஓட்டங்களைப் பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிசார்பாக பேர்ளி டெனோவன் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி அணிவீரர் சங்கீத் தெரிவானார். சகலதுறை ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி அணிவீரர் ஹரிசனும், சிறந்த பந்து வீச்சாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் ஆதித்யாவும், சிறந்த துடுப்பாட்ட நாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி அணிவீரர் சங்கீத்தும், சிறந்த களத்தடுப்பு வீரனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் டிலக்சனும் தெரிவாகினர். இதுவரை நடைபெற்ற ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ண ஒருநாள் போட்டியில் 24 தடவைகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், 8 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

(க-27)



# படுகொலையான விரிவுரையாளருக்கு யாழில் உணர்வுபூர்வமான அஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 24

படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவ பீடத்தின் மூத்த விரிவுரையாளர் மருத்துவர் தயாளினி திலீபனின் இறுதி அஞ்சலி நிகழ்வு கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

சுண்டுக்குளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் ஆரம்பமான இறுதிக்கிரியைகளில், பல்வேறு தரப்பினரும் அஞ்சலிகளைச் செலுத்தினர். தொடர்ந்து அவரது பூதவுடல் அவர் நீண்டகாலம் பணியாற்றிய கைதடியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சித்த மருத்துவ பீடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, பேராசிரியர்கள், விரிவுரையாளர் கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என நூற்றுக்கணக்கானோர் திரண்டு இறுதி மரியாதையைச் செலுத்தினர். தொடர்ந்து மூத்த விரிவுரையாளரின் பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. (க-66)

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 03 . 1945



இறப்பு 23 . 03 . 2026

**மரியநாயகம் மேரி விக்ரோறியா (மணி)**

மிருசுவிலை பிறப்பிடமாகவும் கிளாலியை வதிவிடமாகவும் கொண்ட மரியநாயகம் மேரி விக்ரோறியா (மணி) அவர்கள் நேற்று (23.03.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியநாயகம் (முன்னைநாள் கூட்டுறவு முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தமியாம்பிள்ளை - ஆனாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை - பிலிப்பாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான றதநாயகம், ரூபநாயகம் மற்றும் ராசாத்தி, பவுண் ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்மிலி, சர்மிலன், சர்நிலன், சர்னுஜன், டிலூ, பொறிஸ், ஸ்ரெபினி, நிக்கொலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (25.03.2026) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மிருசுவில் சென் நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
பவுண்: 077 899 4219
ராசாத்தி: 077 653 6551

(CS 31503) A



செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org